# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in**


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 81 / 2016**

திரு. N.E. பாஸ்கரன்,
1/32, பெருமாள் கோவில் தெரு,
அருமந்தை, கூட்டு ரோடு,
ஞாயிறு. . . . மேல் முறையீட்டாளர்
(திரு. N.E. பாஸ்கரன்)

எதிர்

செயற் பொறியாளர்/ஆவடி,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
229, எம்.என். ரோடு,
ஆவடி, சென்னை– 600 054. . . . எதிர்மனுதாரர்

**கேட்புரை நாள்: 28.12.2016**

**ஆணை நாள் : 25–1–2017**

திரு. N.E. பாஸ்கரன், த/பெ ஏகாம்பர முதலியார், அருமந்தை கூட்டு ரோடு அவர்களின் 4–10–2016 நாளிட்ட மனு, மேல்முறையீட்டு மனு எண் 81/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின்மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 28–12–2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து, மின்குறை தீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

மேல்முறையீட்டாளரின் நஞ்சை சர்வே எண்.558ல் உள்ள மின்இணைப்பு புதிய எண்.10/GNR (பழைய எண்.26–32–51)ஐ சர்வே எண்.430/1/Dக்கு மாற்றி தரவேண்டும் என்று கோரியுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம் :

2.1 மேல்முறையீட்டாளரின் பெயரில் விவசாய மின்இணைப்பு எண்.26–32–51, சர்வே எண்.558ல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அனுமதிக்கப்பட்ட மின்பளு 7.5 HP ஆகும். மேற்கண்ட மின்இணைப்பு எதிர்மனுதாரரின் ஆளுகைக்கு உட்பட்ட அருமந்தை பிரிவு அலுவலகத்தின் கீழ் உள்ளது.

2.2 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட விவசாய மின் இணைப்பை சர்வே எண்.558–லிருந்து சர்வே எண்.430/1/Dக்கு மாற்ற உதவி பொறியாளர் அருமந்தை அவர்களுக்கு மனு செய்துள்ளார். ஆனால், கோரிய சர்வே எண். மாற்றம் வழங்கப்படவில்லை என்பதால் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார். மன்றம் மனு செய்து 50 நாட்கள் கடந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

2.3 மன்ற விதி 17(4)(a)ன் படி முறையீட்டாளரின் மனுவிற்கு மன்றம் மனு செய்து 50 நாட்கள் கடந்தும் பதில் எதுவும் தரவில்லை என்றால் முறையீட்டாளர் மனுவை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பிக்கலாம் என்று உள்ளது.

2.4 மன்றத்தில் 9.6.2016 அன்று பெறப்பட்ட மனுவிற்கு 4.10.2016 அன்று வரை பதில் இல்லை என்பதால் மேற்கண்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.81/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில் 21.10.2016 அன்று மன்றம் தன்னுடைய தீர்வை தெரிவித்துள்ளது.

### 3. மன்றத்தின் தீர்வு

3.1 சென்னை மின்பகிர்மான வட்டம் /மேற்குவின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 21.10.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“தீர்வுரை*

*மனுதாரர் அவர்கள் ம.பாஸ்கரன் பேட்டை கிராமத்தில் உள்ள SF No.340/1Dல் ஏற்கனவே ஒரு விவசாய மின்னிணைப்பு ஆழ்குழாய் கிணறுக்கு உள்ளதாகவும் அதில் உள்ள தண்ணீர் நிலத்திற்கு போதுமானதாக இல்லையாதலால் அதே சர்வே எண்ணில் போடப்பட்டிருக்கும் ஆழ்குழாய் கிணறுக்கு ஞாயிறு கிராமத்தில் SF No.588ல் தன்னுடைய பெயரில் உள்ள மின்னிணைப்பை விரைவில் மாற்ற வேண்டி கேட்டுள்ளார்.*

*மனுதாரரின் கோரிக்கைக்கு எதிர் மனுதாரர் அளித்த விளக்கத்தில் ஞாயிறு கிராமத்திலுள்ள SF No.588ல் மனுதாரர் குறிப்பிட்டிருக்கும் நிலத்தில் ஆழ்குழாய் கிணறு எதுவும் இல்லாத நிலையில் நிலம் தண்ணீரில்லாமல் காய்ந்த நிலையில் உள்ளதாகவும் மற்றும் பதிவு செய்யப்பட்ட பத்திர எண்.2434/2003ல் மனுதாரர் அவர்கள் SF No.558ல் இரண்டு சென்ட் நிலம் மற்றும் மின்னிணைப்பு எண்.10 மட்டும் ஆழ்குழாய் கிணறு இல்லாமல் மனுதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டு உள்ளதாகவும் மற்றும் மேற்கண்ட மின்னிணைப்பை SF No.430/1Dற்கு மாற்ற கோரியுள்ள நிலத்தில் ஏற்கனவே ஒரு 7.5 HP விவசாய மின்இணைப்பு எண்.361 மனுதாரரின் பெயரில் உள்ளது என்றும் கடித எண்.SE/RE&I(D)/ EE/RE/A1/F.DOC/D.1519/2011 (Tech Br) dt.1.12.2011ன் படி ஒரு இடத்தில் உள்ள விவசாய மின்னிணைப்பை வேறிடத்திற்கு மாற்ற வேண்டுமானால் ஏற்கனவே மின்னிணைப்பு இருந்த நிலம் / ஆழ்குழாய் கிணறு மற்றும் மாற்றம் கோரப்பட்டுள்ள நிலம்/ஆழ்குழாய் கிணறு இவ்விரண்டிலும் விவசாய பயன்பாடு இருக்க வேண்டும் என்றும் கடித எண்.SE/RE&I(D)/ EE/RE/A1/F.DOC/D.1472/2010 dt.23.10.2010ன் படி ஒரே சர்வே எண்ணில் இருக்கும் தனித்தனி ஆழ்குழாய் கிணறுக்கு மின்னிணைப்பு வழங்க வேண்டுமானால் ஆழ்குழாய் கிணறுகளுக்குகிடையே உள்ள இடைவெளி NABARD வழிகாட்டுதலின்படி இருக்க வேண்டும் என்றும் மனுதாரர் விவசாய மின்னிணைப்பை மாற்ற கோரப்பட்டுள்ள புதிய ஆழ்துளை கிணறு உள்ள சர்வே எண்ணில் 100 மீட்டருக்குள் ஆழ்குழாய் கிணறு மற்றும் மின்னிணைப்பு இருப்பதால் NABARD வழிகாட்டுதலின்படி மின்னிணைப்பை மாற்ற இயலாது என்று தெரிவித்துள்ளார்.*

*மனுதாரர் சமர்ப்பித்த விற்பனை பத்திரத்தை ஆய்வு செய்ததில் ஞாயிறு கிராமத்தில் சர்வே எண்.588ல் மனுதாரர் பெயரில் இரண்டு சென்ட் நிலமும் அதிலுள்ள மின்னிணைப்பு எண். 26–32–51ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ,விற்பனை பத்திரத்தில் ஆழ்குழாய் கிணறு எதுவுமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடித எண்.SE/RE&I(D)/ EE/RE/A1/F.DOC/ D.1519/2011 (Tech Br) Dt.1.12.2011ன் படி ஒரு இடத்தில் உள்ள விவசாய மின்னிணைப்பை வேறிடத்திற்கு மாற்ற வேண்டுமானால் ஏற்கனவே மின்னிணைப்பு இருந்த நிலம்/ஆழ்குழாய்*

*கிணறு மற்றும் மாற்றம் கோரப்பட்டுள்ள நிலம்/ஆழ்குழாய் கிணறு இவ்விரண்டிலும் விவசாய பயன்பாடு இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆழ்குழாய் கிணறு இல்லாத பட்சத்தில் மனுதரார் இரண்டு சென்ட் நிலம் மட்டும் வாங்கி விவசாயம் செய்ய இயலாது மற்றும் கடித எண்.SE/RE&I(D)/EE/RE/A1/F.DOC/D.1472/2010 23.10.2010ன் படி ஒரே சர்வே எண்ணில் இருக்கும் தனித்தனி ஆழ்குழாய் கிணறுக்கு மின்னிணைப்பு வழங்க வேண்டுமானால் ஆழ்குழாய் கிணறுகளுக்கிடையே உள்ள இடைவெளி NABARD வழிகாட்டுதலின்படி இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ம.பாஸ்கரன் பேட்டை கிராமத்தில் சர்வே எண்.430/1/Dல் ஏற்கனவே ஒரு விவசாய மின்னிணைப்பு ஆழ்குழாய் கிணறுக்கு மனுதாரர் பெயரில் உள்ளது. அதற்கு அடுத்து 100 மீட்டர் இடைவெளிக்குள் இன்னொரு ஆழ்குழாய் கிணறு அமைத்து ஞாயிறு கிரமத்தில் தன்னுடைய பெயரில் உள்ள விவசாய மின்னிணைப்பை மேற்கண்ட ஆழ்குழாய் கிணறுக்கு மாற்றக் கோரியுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். NABARD வழிகாட்டுதலில் இரு ஆழ்குழாய் கிணறுகளுக்கு குறைந்தபட்சம் 600 மீட்டர் இடைவெளி கொடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர் சர்வே எண்ணில் 430/1/Dல் புதியதாக அமைத்துள்ள ஆழ்குழாய் கிணறுக்கும் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணறுக்கும் உள்ள இடைவெளி 100 மீட்டருக்குள் இருப்பதால் புதிதாக அமைத்துள்ள ஆழ்குழாய் கிணறுக்கு NABARD வழிகாட்டுதலின்படி மின்னிணைப்பு வழங்க இயலாது.*

***ஆணை***

*மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களால், ஞாயிறு கிராமத்தில் சர்வே எண். SF No.588ல் மனுதாரர் பெயரில் உள்ள விவசாய மின்னிணைப்பை ம.பாஸ்கரன் பேட்டை கிராமத்தில் உள்ள சர்வே எண்.430/1/Dல் அமைக்கப்பட்டிருக்கும் புதிய ஆழ்குழாய் கிணற்றிற்கு மாற்ற இயலாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

## 4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

4.1 மேல்முறையீட்டாளரின் நிலத்தில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணறு பழுதடைந்த காரணத்தால் நஞ்சை சர்வே எண்.558ல் உள்ள மின்இணைப்பு எண்.10/GNR 26–32–51ஐ சர்வே எண்.430/1/Dற்கு மாற்றுவதற்கு கேட்டுக் கொண்டுள்ளார்.

4.2 மன்றத்திற்கு மனு செய்தும் 50 நாட்களுக்கு மேலாக பதில் எதுவும் பெறப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

5 <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

5.1 மனுதாரர் அவர்கள் SF No.588 ஞாயிறு கிராமத்தில் தன்னுடைய பெயரில் உள்ள 7.5 HP விவசாய மின்னிணைப்பு எண்.10(பழைய எண்.26–32–51) ஐ ம.பாஸ்கரன் கிரமத்தில் உள்ள தன்னுடைய SF No.430/1/Dற்கு மாற்றக் கோரியுள்ளார்.

5.2 மனுதாரர் அவர்கள் பத்திர எண்.2434/2003ல் ஞாயிறு கிராமத்திலுள்ள *SF No*.558ல் இரண்டு செண்ட் நிலம் மற்றும் மின்னிணைப்பு எண்.10 மட்டும் ஆழ்குழாய் கிணறு இல்லாமல் மனுதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குண்டான ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

5.3 மேலும், ஞாயிறு கிராமத்திலுள்ள *SF No*.588ஐ ஆய்வு செய்ததில் மனுதாரர் குறிப்பிட்டிருக்கும் நிலத்தில் கிணறு/ஆழ்குழாய் கிணறு எதுவும் இல்லாத நிலையில் நிலம் தண்ணீரில்லாமல் காய்ந்த நிலையில் காணப்பட்டது. கடித எண்.SE/RE&I(D)/EE/RE/ F.DOC/D1519/2011(Tech Br) 1.12.2011ன் படி ஒரு இடத்தில் உள்ள விவவசாய மின்னிணைப்பை வேறிடத்திற்கு மாற்ற வேண்டுமானால் ஏற்கனவே மின்னிணைப்பு இருந்த நிலம்/ஆழ்குழாய் கிணறு மற்றும் மாற்றம் கோரப்பட்டுள்ள நிலம்/ஆழ்குழாய் இவ்விரண்டிலும் விவசாய பயன்பாடு இருக்க வேண்டும்.

5.4 மனுதாரர் ம.பாஸ்கரன் பேட்டை கிராம SF No.430/1/Dற்கு மாற்ற கோரியுள்ள நிலத்தில் ஏற்கனவே ஒரு 7.5 HP விவசாய மின்னிணைப்பு எண்.361 மனுதாரரின் பெயரில் உள்ளது. மேலும், மின் பகிர்மான தொகுப்பு விதி 29(2) மற்றும் 27(13)ன் படி பண்ணை வீட்டில் வீட்டு பயன்பாட்டிற்காக தண்ணீர் ஏற்றவும் வானொலி மற்றும் பிற பயன்பாட்டு கருவிகளுக்கு பயன்படுத்தவும் தனி மின்னிணைப்பு தேவை என ஒரு வேளாண் மின்னிணைப்போடு கேட்டால் ஒரே புல அளவு எண்ணில் / துணை பிரிவு புல எண்ணில் ஒன்றுக்கு மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்படும். 27(13) ஒரே கதவிலக்கத்திற்கு அல்லது துணை கதவிலக்கிற்கு

அல்லது தனி ஒருவருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட இணைப்புகள் தர முடியாது. ஆகையால் ஒரு புல எண்ணில் விவசாய மின்னிணைப்பு ஒன்றுதான் பெற முடியும் என்று தெரிகிறது.

5.5 கடித எண்.SE/RE&I(D)/EE/RE/F.DOC/D1472/2010 dt.23.12.2010ன் படி ஒரே சர்வே எண்ணில் இருக்கும் தனித்தனி ஆழ்குழாய் கிணறுக்கு மின்னிணைப்பை வழங்க வேண்டுமானால் ஆழ்குழாய் கிணறுகளுக்கிடையே உள்ள இடைவெளி NABARD வழிகாட்டுதலின்படி இருக்க வேண்டும். மேலும், மனுதாரர் விவசாய மின்னிணைப்பை மாற்ற கோரப்பட்டுள்ள ம.பாஸ்கரன் பேட்டை கிராமம் SF No.430/1/D புதிய ஆழ்குழாய் கிணறுக்கும் அதே சர்வே எண்ணில் உள்ள பழைய விவசாய ஆழ்குழாய் கிணறுக்கும் 100 மீட்டருக்குள் அமைந்துள்ளதனால் *NABARD* வழிகாட்டுதலின்படி மின்னிணைப்பை மாற்ற இயலாது.

5.6 எனவே, ஞாயிறு கிராமத்தில் சர்வே எண்.*SF No.*588ல் மனுதாரர் பெயரில் உள்ள விவசாய மின்இணைப்பை ம.பாஸ்கரன் பேட்டை கிராமத்தில் உள்ள சர்வே எண்.430/1/*D*ல் அமைக்கப்பட்டிருக்கும் புதிய ஆழ்குழாய் கிணற்றிற்கு மாற்ற இயலாத காரணத்தினால் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**6. <u>மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>**

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 28.12.2016 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல் முறையீட்டாளர் திரு. N.E. பாஸ்கரன் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தனர்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. J. பாலசந்தர், உதவி செயற்பொறியாளர்/புழல் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு இருந்த இடம், தன்னால் 2003ம் வருடம் விலைக்கு வாங்கப்பட்டது என்றும் அந்த மின்இணைப்பு அவரின் பெயருக்கு 8/2003ம் வருடம் மாற்றம் செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார்.

7.2 பெயர் மாற்றம் செய்த பின்பு அந்த மின்இணைப்பு தனக்கு சொந்தமான சர்வே எண்.430/1/Dயிலுள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு மாற்றி தரும்படி 2003ம் வருடமே மனுசெய்ததாகவும் ஆனால் மின்இணைப்பை மாற்றித்தரவில்லை என்றும் தெரிவித்தார்.

7.3 மேலும், 430/1/Dல் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு ரூ.50,000/– சுயநிதி திட்டத்தின் கீழ் மின்இணைப்பு வழங்கப்பட்டது என்றும் பிற்காலத்தில் சர்வே எண்.558ல் உள்ள மின்இணைப்பை மாற்றிக் கொள்ளலாம் என்றும் தன்னிடம் மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர் என்றும் வாதிட்டார்.

7.4 ஒரு சர்வே எண்.ணில் ஒரு விவசாய மின் இணைப்பு தான் தரமுடியும் என்று தற்பொழுது தெரிவிக்கும் மின்வாரியம் தன்னிடம் பிற்காலத்தில் அவர் மின்இணைப்பு பெற்ற 430/1/*D* என்ற நிலத்தில் மேலும் ஒரு மின்இணைப்பு தருவதாக ஏன் தெரிவித்தார்கள் என்றும் கேள்வி எழுப்பினார்.

7.5 மேலும், ஒரே சர்வே எண்ணில் ஒன்றிற்கும் மேற்பட்ட விவசாய மின்இணைப்புகள் மின்வாரியத்தில் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் வாதிட்டு அதேபோல் தனக்கும் மின்இணைப்பு வழங்க வேண்டும் என்றும் வாதுரை புரிந்தார்.

7.6 இரண்டு ஆழ்குழாய் கிணறுகளுக்கும் இடையிலுள்ள இடைவெளி 100 மீட்டர் தான் உள்ளது. எனவே, அந்த இடைவெளி NABARD வழிகாட்டுதலின்படியுள்ள இடைவெளிக்கும் குறைவாக உள்ளது என்று வாதிடப்படுகிறது. வேறு புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பொழுது நீர் எங்கு கிடைக்கின்றதோ அங்குதான் அமைக்க முடியும். மேலும், மேற்கண்ட இடைவெளிக்கும் குறைவாக உள்ள இரண்டு கிணறுக்கும் மின்வாரியம் விவசாய

மின்இணைப்புகள் வழங்கியுள்ளன என்றும் எனவே, தனக்கும் மின்இணைப்பு வழங்க வேண்டும் என்றும் வாதுரை புரிந்தார்.

7.7 சர்வே எண். 558ல் கிணறு தற்பொழுது இல்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். போன வருடம் (2015ல்)பெய்த மழையில் கிணறு தூர்ந்து போய் உள்ளது. ஆனால், தன்னுடைய shifting விண்ணப்பம் அளிக்கும்பொழுது கிணறு இருந்தது என்றும் வாதிட்டார்.

8. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாட்களில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் சார்பில் திரு. J. பாலசந்தர், உதவி செயற்பொறியாளர்/புழல் அவர்கள் கலந்துகொண்டு எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலிலயுறுத்தினார்.

8.2 சர்வே எண்.588ல் ஆய்வு செய்ததில் மேற்கண்ட நிலத்தில் கிணறு/ஆழ்குழாய் கிணறு எதுவும் இல்லை என்றும் எனவே அங்கு விவசாயம் நடைபெறவில்லை என்றும் தெரிவித்து ஒரு விவசாய மின்இணைப்பை ஒரு கிணற்றிலிருந்து வேறு கிணற்றிற்கு மாற்றவேண்டும் எனில் ஏற்கனவே மின்இணைப்பு உள்ள கிணற்றில் நீர் இருக்க கூடாது மற்றும் ஏற்கனவே மின்இணைப்பு உள்ள இடம் மற்றும் மாற்றம் கோரும் நிலம் இரண்டிலும் விவசாயம் நடைபெறவேண்டும். ஆனால், இங்கு சர்வே எண்.558ல் விவசாயம் நடைபெறவில்லை மற்றும் கிணறும் இல்லை. எனவே, மின்இணைப்பு மாற்றம் வாரிய விதிகளின்படி முடியாது என்று வாதிட்டார்.

8.3 வாரியத்தின் ஆணை எண்.SE/RE&I(D)/EE/RE/F.DOC/D1472/2010dt.23.12.2010ன் படி இரண்டு ஆழ்குழாய் கிணறுகளுக்கு இடையில் உள்ள இடைவெளி NABARD வழிகாட்டுதலின்படி இருக்க வேண்டும். இந்த வழக்கிலுள்ள இரண்டு ஆழ்குழாய் கிணற்றிற்கும் இடையிலுள்ள தூரம் 100 மீட்டருக்குள் அமைந்துள்ளதால் அதன்படியும் மின்இணைப்பை மாற்ற இயலாது என்றும் வாதிட்டார்.

8.4 மேலும், மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 29(2) மற்றும் 27(13)ன்ஆகியவற்றை சுட்டிக்காட்டி ஒரு சர்வே எண்ணில் ஒரு விவசாய மின்இணைப்பு மட்டும்ததான் வழங்க முடியும். இங்கு சர்வே எண்.430/1/*D*ல் மின்இணைப்பு எண்.361 உள்ளதால், அதே சர்வே எண்ணில் மேலும் ஒரு மின்இணைப்பு வழங்க முடியாது என்பதாலும் மேற்கண்ட மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்றும் வாதிட்டார்.

8.5 மேல்முறையீட்டாளர் கிணறு 2015ல் பொய்த்த மழையில் தூர்ந்து போய்விட்டது என்பது தவறு. 2003ல் அவர் மேற்கண்ட 2 செண்ட் நிலம் மற்றும் மின்இணைப்பை வாங்கும்பொழுது அங்கு கிணறு அல்லது ஆழ்கிணறு இல்லை என்று தெளிவாக ஆவண எண். 2434/2003ல் பதிவு செய்யப்பட்டுள்ள விற்பனை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

## 9. <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது வழக்கெழு வினாக்களாக இருப்பது.

(i) மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான சர்வே எண்.558ல் உள்ள விவசாய மின்இணைப்பை சர்வே எண்.430/1/*D*க்கு மாற்றவேண்டும் என்பது விதிகளின்படி ஏற்புடையதானா ? என்பது ஆகும்.

(ii) எதிர்மனுதாரர் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(13) மற்றும் 29(2) ஆகியவற்றை சுட்டிக்காட்டி மேற்கண்ட விதிகளின்படி ஒரு சர்வே எண்ணில் ஒரு விவசாய மின் இணைப்புதான் வழங்க முடியும் என்று வாதிட்டுள்ளார். அந்த விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

***"27. மின் ஆற்றல் வழங்கலுக்கான கேட்புகள்***
*xxx xxx xxxx*
*xxx xxx xxxx*
*13) ஒரே கதவிலக்கத்துக்கு அல்லது துணைக் கதவிலக்கத்துக்கு அல்லது தனியொருவருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்பட முடியாது.*
*xxx xxx xxxx*
*xxx xxx xxxx*

***29. மின்னிணைப்புத் தொடர்கள்***

*xxx xxx xxxx*

*(2) பண்ணை வீட்டில் வீட்டுப் பயன்பாட்டுக்காகத் தண்ணீர் ஏற்றவும், வானொலி மற்றும் பிற பயன்பாட்டுக் கருவிகளுக்குப் பயன்படுத்தவும் தனி மின்னிணைப்பு தேவையென, ஒரு வேளாண் மின்னிணைப்போடு கேட்டால், ஒரே புல அளவை எண்ணில் (survey field number) / துணைப்பிரிவு புல எண்ணில் ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புக்கள் தரப்படும்.*

*xxx xxx xxxx*

*xxx xxx xxxx*

9.2 மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(13)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, ஒரு கதவிலக்கம் அல்லது துணை கதவிலக்கத்தில் உள்ள ஒருவருக்கு ஒரு மின்இணைப்பிற்கு மேல் கொடுக்க முடியாது என்று தெரிகிறது.

9.3 மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பின் விதி 29(2)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது பண்ணை வீட்டில் வானொலி, வீட்டிற்கு வெளிச்சம் மற்றும் வீட்டிற்கான மற்ற பயன்பாட்டிற்காகவும் தனி மின்னிணைப்பு வேண்டும் என்று நுகர்வோருக்கு தேவைப்பட்டால் விவசாய மின்இணைப்பு தவிர மேலும் ஒரு மின்இணைப்பு ஒரு புல எண்/துணை புல எண்ணில் வழங்கலாம் என்று தெரிகிறது. ஆகவே, ஒரு புல எண்ணில் ஒரு விவசாய மின் இணைப்புதான் வழங்க முடியும் என்று தெரிகிறது.

9.4 இந்த வழக்கில் சர்வே எண்.558ல் உள்ள விவசாய மின்இணைப்பை மாற்றி வைக்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளரால் கோரப்படும் சர்வே எண்.430/1/*D*ல் ஏற்கெனவே ஒரு விவசாய மின்இணைப்பு எண்.361 மேல்முறையீட்டாளரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரும் அவர் அந்த சர்வே எண்ணில் ஏற்கனவே சுயநிதி திட்டத்தில் விவசாய மின் இணைப்பை பெற்றுக்கொண்டு உள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே, சர்வே எண்.430/1/*D*ல் ஏற்கெனவே ஒரு விவசாய மின்இணைப்பு எண்.361 மேல்முறையீட்டாளரின் பெயரில் தற்பொழுதும் உள்ளது என்பதில் இருதரப்பினருக்கும் கருத்து வேற்றுமை இல்லை.

9.5 சர்வே எண்.430/1/*D*ல் விவசாய மின்இணைப்பு எண்.361 மேல்முறையீட்டாளரின் பெயரில் ஏற்கெனவே உள்ளது என்பதால் பகிர்மான விதித்தொகுப்பின் விதி 29(2)ன்படி

மேலும் ஒரு விவசாய மின்இணைப்பு அவரின் பெயரில் அதே சர்வே எண்ணிற்கு (சர்வே எண்.430/1/*D*ற்கு) வழங்க முடியாது என்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான சர்வே எண்.558ல் உள்ள விவசாய மின்இணைப்பு (பழைய எண்.26–32–51)ஐ சர்வே எண்.430/1/*D*க்கு மாற்றித்தரவேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10. <u>முடிவுரை</u>**

**10.1** மேற்காணும் பத்தி **9**ன் படி சர்வே எண்.**430/1/*D***ல் விவசாய மின்இணைப்பு எண்.**361** மேல்முறையீட்டாளரின் பெயரில் ஏற்கெனவே உள்ளது என்பதால் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி **29(2)**ன்படி மேலும் ஒரு மின்இணைப்பு அவரின் பெயரில் அதே சர்வே எண்ணிற்கு அதாவது சர்வே எண்.**430/1/*D***ற்கு வழங்க முடியாது என்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான சர்வே எண்.**558**ல் உள்ள விவசாய மின்இணைப்பு (பழைய எண்.**26–32–51**)ஐ சர்வே எண்.**430/1/*D***க்கு மாற்றித்தரவேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.2** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.**81/2016** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு. N.E. பாஸ்கரன்,
**1/32**, பெருமாள் கோவில் தெரு,
அருமந்தை, கூட்டு ரோடு,
ஞாயிறு.

**2)** செயற் பொறியாளர்/ஆவடி,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
**229**, எம்.என். ரோடு,
ஆவடி, சென்னை– **600 054.**

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/மேற்கு,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11 கே.வி. திருமங்கலம் துணை மின் நிலையம்,
அண்ணா நகர், சென்னை–600 040.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.